## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்
அசல் வழக்கு எண். 122/2013

இன்று 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தெய்வசிகாமணி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சின்னச்சாமி | கிராமம் | : அரண்மனைபுதூர் |
| வயது | : 83 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 08-04-2026 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 7 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1. காளியப்ப கவுண்டரின் அப்பா பெயர் கருப்ப கவுண்டர் என்றால் எனக்கு தெரியாது. காளியப்ப கவுண்டருக்கு கருப்ப கவுண்டர், கொண்டத்து கவுண்டர், சின்னைய கவுண்டர், நாச்சியப்ப கவுண்டர் என்ற 4 மகன்கள் என்றால் இல்லை. தாவாவின் வழக்குரையில் தாவாச் சொத்தின் பழைய க.ச.எண்.50 நாச்சியப்ப கவுண்டருக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்டது என்று தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவாச் சொத்து பூர்வீக சொத்து எனக் காட்ட பிராதில் வம்சாவழி பட்டியல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன்.

2. பூர்வீகச் சொத்து என்பதைக் காட்ட நாச்சியப்ப கவுண்டர் அவரது அப்பா பெயரில் உள்ள எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் தான் தாவாச் சொத்து பொறுத்து முதன்முதலாக ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் 1918ல் ஏற்பட்ட குத்தகை பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் நாச்சியப்ப கவுண்டருக்கு குத்தகைக்கு விடப்பட்ட சொத்து எவ்வாறு கிடைத்தது என எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்பட்டுள்ளது.

3. 7 முதல் 9 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்துக்கான மூல ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். 1918க்கு முன்பே சேஷ அய்யங்கார் காளியப்ப கவுண்டருக்கு ஒரு குத்தகை பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால்

சரிதான். பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் உள்ள விவரங்களை நான் படித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் மைனர் இனாம் ஒழிப்பு சட்டத்திற்கு முன்பாக கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்து என எழுதி உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் கண்ட சொத்துக்களின் ஒரு பகுதி சொத்து தான் தாவாச் சொத்து என்றால் எனக்கு தெரியாது. தாவாவில் கண்டுள்ள சொத்து விவரத்தின் நான்கு எல்லைகள், சர்வே எண்கள் சரியானதா என்றால் சரியானது தான். நான் தாவா தாக்கல் செய்த போது க.ச.எண்.50 என்பது இல்லை என்றால் சரியல்ல. 1968 ல் இனாம் ஒழிப்பு தாசில்தார் க.ச.எண்.50 ஐ 50/1, 50/2 என உட்பிரிவு செய்து தனித்தனியாக விஸ்தீரணம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதன்பின்னிட்டு நடந்த வழக்குகளில் எல்லாம் 50/1, 50/2 என குறிப்பிட்டு தான் நடந்து முடிந்தது என்றால் சரிதான்.

5. எனக்கு சேஷ அய்யங்கார் மற்றும் அவரது மகன் சுப்பைய அய்யங்காரை தெரியுமா என்றால் தெரியாது. தாவாச் சொத்து பொறுத்து பல்வேறு நீதிமன்றங்களில் நடந்த வழக்குகள், வருவாய் துறை அலுவலகங்களில் நடந்த வழக்குகளில் என் அம்மா வழக்கு நடத்திய விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தானா என்றால் ஆமாம். அந்த மனுவை நான் தான் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த மனு **பி.வா.சா.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. பி.வா.சா.ஆ.14 மனுவில் நான் சுப்பைய அய்யங்காரின் வாரிசுகள் அவர்களுக்கு பாத்தியமில்லாத க.ச.எண்.50/2 சொத்துக்களை பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் படி மாற்றிக் கொண்டுள்ளதால் அது கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது துறைவாரி நடவடிக்கை எடுக்கவேண்டும் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்தபோது க.ச.எண்.50/2 சொத்தின் பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் எனக்கு தெரியாது.

7, தாவாவில் சுப்பைய அய்யங்காரின் வாரிசுகளை நான் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். 2015 ம் ஆண்டிலேயே எனக்கு சர்வே எண் 50/2 குறித்து பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரிந்த காரணத்தினால் அவர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து விவரத்தில் இனாம்

நிலம் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இனாம் சொத்து என வழக்குரையில் குறிப்பிட்டு விட்டு தாவாச் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல.

8. நாச்சியப்ப கவுண்டருக்கு சின்னச்சாமி கவுண்டர், இன்னாசிமுத்து கவுண்டர் என இரண்டு மகன்கள் என்றால் சரியல்ல. ஒரே மகன் தான் அவரது பெயர் சின்னச்சாமி கவுண்டர் ஆகும். இனாம் ஒழிப்புக்கு பிறகு வருவாய் துறையினர் யாராருக்கு பட்டா கொடுக்கலாம் என்று அவர்களது அதிகாரத்தின்படி 07.10.1968 ம் தேதி உத்தரவு பிறப்பித்துள்ளார்கள் என்றால் சரிதான். 07.10.1968 ம் தேதி பிறப்பித்த அந்த உத்தரவை பற்றி தாவா வழக்குரையில் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

9. 07.10.1968 ம் தேதி பிறப்பித்த அந்த உத்தரவை எதிர்த்து சி.எம்.ஏ.311/1969 மற்றும் 429/1969 என இரண்டு பல்வகை மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் அம்மா தாக்கல் செய்த மனு சி.எம்.ஏ. 429/1969 என்றால் சரிதான். 12.04.1971 ம் தேதியில் இருந்த இந்த தாவா தாக்கல் செய்யும் தேதி வரை நானோ, என் தாயாரோ பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். பல்வகை மேல்முறையீடு மனுக்கள் தாக்கல் செய்த தேதியில் இருந்து தாவா தாக்கல் செய்யும் தேதி வரை க.ச.எண்.50/2 எங்கள் அனுபவத்தில் இருந்தது என்பதைக் காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

10. பி.வா.சா.ஆ.10 ஏற்பட்ட நாளில் இருந்து எனக்கும் என் தாயாருக்கும் அந்த பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை தெரிந்து இருந்தும் நாளது வரை அந்த ஆவணத்தை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாவுடன் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் 5 வரை உள்ள ஆவணங்களில் கண்ட ஷரத்துக்கள் தவறானது என்றும் அவைகளில் அந்த சொத்துக்கள் எங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவாச் சொத்து எங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்றால் சரியல்ல.

11. தாவாச் சொத்து பொறுத்து முந்தைய நீதிமன்ற நடவடிக்கைகளில் மேற்சொன்ன பி.வா.சா.ஆ.10 ஐ நாங்கள் தாக்கல் செய்திருந்தால் உண்மை வெளிப்பட்டு உத்தரவு என்

தாயாருக்கு சாதகமாக ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. குத்தகைக்கு எடுத்த சொத்தை வா.சா.ஆ 5 ன்படி நாங்கள் பிரித்துக் கொண்டதாக தாவாவில் சொல்லி உள்ளது தவறானது என்றால் சரியல்ல. உரிமையில்லாத சொத்தை நாங்கள் பாகப்பிரிவினையில் பிரித்துக் கொண்டதாக காண்பித்து இந்த தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

12. சுப்பைய அய்யங்கார் மகன் ஜெயபாலை எனக்கு தெரியும் என்றும் அவர் தாவாச் சொத்து பொறுத்து எடுத்த நடவடிக்கைகளும் தெரியும் என்றாலும், தாவாவிற்காக சுப்பைய அய்யங்கார் மற்றும் அவரது மகன் ஜெயாலை தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவு தவறு என்று என் தாயாரும், சுப்பம்மாளும் மேல்முறையீடு செய்தார்களா என்றால் செய்தார்கள். வழக்கு எண் எனக்கு ஞாபகமில்லை. அந்த விசாரணையில் என் தாயார் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

13. மேல்முறையீடு குறித்த விவரங்களை இந்த வழக்கில் நான் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு அப்போது ஆவணங்கள் கிடைக்கவில்லை. அதனால் நான் தாக்கல் செய்யவில்லை. வழக்கிற்காக வழக்கு தாக்கல் செய்தபோது அந்த ஆவணங்கள் எனக்கு கிடைக்கவில்லை தவறாக சொல்கிறேன் என்றாலும், அந்த ஆவணங்களை நான் தாக்கல் செய்தால் அது எனக்கு சாதகமாக இருக்காது என்று தெரிந்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

14. கடந்த 19.06.1974 ல் மேல்முறையீட்டு உத்தரவில் க.ச.எண்.50/2 ல் 5.63 ஏக்கருக்கு இனாம் ஒழிப்புச் சட்டப்பிரிவு 8(2)(1)(a) ன்படி பட்டா கே.எஸ்.எஸ்.சுப்பையா அய்யங்கார் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கடந்த 1974 ம் ஆண்டில் இருந்தே பட்டா கே.எஸ்.எஸ்.சுப்பையா அய்யங்கார் பெயரில் உள்ளது எனக்கு தெரியும் தாவாவிற்காக தெரியவில்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. பட்டா கொடுத்த பிறகு கே.எஸ்.எஸ்.சுப்பையா அய்யங்கார் Fair rent fix செய்வதற்காக நடவடிக்கை மேற்கொண்டு நிலுவையில் இருந்த விவரம் எங்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல.

15. Fair rent fix செய்வதற்காக எடுத்த நடவடிக்கை நிலுவையில் இருக்கும்போது கோவில் அதிகாரி தாவாச் சொத்து கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றும் எங்களை ஆக்கிரமிப்பாளர் என்று சொல்லி காலி செய்ய நடவடிக்கை எடுத்தார் என்றால் சரிதான். மேற்சொன்ன விவரங்கள் எனக்கு தெரிந்த காரணத்தினால் தான் தாவாச் சொத்து என்

உடமையில் இல்லை என தெரிந்து கொண்டு பி.வா.சா.ஆ.14 ன் வாயிலாக 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் நான் மனு செய்து அந்த சொத்தை கோவிலுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

16. தாவாச் சொத்து பொறுத்து வில்லங்கம் பார்த்து வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சுப்பைய அய்யங்கார் இறந்த பிறகு அவரது வாரிசுகள் க.ச.எண்.50/2 சொத்தை ஆவணங்கள் வாயிலாக எவ்வாறு பரிவர்த்தனை செய்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.9 மனுவில் கண்ட சங்கதிகள் சரியானதா என்றால் சரியல்ல. " பி.வா.சா.ஆ.9 ல் மேலும் 21.01.1987 ம் தேதி என் தாயார் எழுதி வைத்த உயிலின்படி மேலே கண்ட சொத்து எனக்கு மட்டுமே உரிமையாகிறது என நான் சொல்லி உள்ளேனா" என்றால் இல்லை.

17. தாவா வழக்குரையில் என்னுடன் பிறந்தவர்கள் வாய்மொழியாக சொத்தை விட்டுக் கொடுத்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். என் தாத்தா, மற்றும் என் அப்பா தாவா சொத்து பொறுத்து இனாம்தாரர் என காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர்கள் இனாம்தாரர்கள் அல்ல. எனது தாயார் செட்டில்மெண்ட் தாசில்தார் விசாரணையில் தாவா சொத்துக்கு எவ்வாறு உரிமை கொண்டாடுகிறார் என்பதற்கு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று கண்டுதான் உத்தரவு பட்டாவானது கே.எஸ்.எஸ். சுப்பையா அய்யங்கார் பெயரில் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

18. தாவாச் சொத்து எங்களுக்கு உரிமைபட்டு இருந்தால் என் தாயார் அந்த விசாரணையில் ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பார் என்றால் சரியல்ல. தாவா விசாரணைக்கு பிறகாவது தாவாச் சொத்தின் வருவாய் ஆவணங்கள் யார் பெயரிலுள்ளது என தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். தெரிந்து கொண்ட பிறகாவது 7 முதல் 9 பிரதிவாதிகளுக்கு விற்ற நபர்கள் பெயரில் வருவாய் ஆவணங்கள் அனைத்தும் அவர்கள் பெயரில் இருப்பது தெரிந்தும், அவர்களை இந்த தாவாவில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

19. தாவா வழக்குரையில் பல உண்மைகளை எனக்கு தெரிந்தும் அதை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்துக்கான உரிமை மூலத்தை நான் முன்னுக்கு பின் முரணாக தெரிவித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

குத்தகைக்கு விடப்பட்ட சொத்தை எங்கள் சொத்து என்று தவறாக உரிமை கொண்டாடி ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து பொறுத்து நீதிமன்ற ஏலத்தில் என் தாயார் எடுத்த விஸ்தீரணத்தை பொறுத்து உரிமையில்லாத நபர் அடமானம் வைத்து, அதை தொடர்ந்து அந்த சொத்து ஏலம் விடப்பட்ட காரணத்தினால், என் தாயாருக்கு ஏலத்தின் மூலம் விடப்பட்ட சொத்தின் விஸ்தீரணத்திற்கு உரிமை ஏற்படாது என்றால் சரியல்ல.

20. இந்து அறநிலையத்துறை எடுத்த உத்தரவை எதிர்த்து கோயம்புத்தூர் இணை ஆணையரிடம் வழக்கறிஞர் மூலமாக நான் ஆஜராகினேன் என்றால் சரிதான். M.P.2/2000 இணை ஆணையர் இந்து அறநிலையத்துறை கோயம்புத்தூர் செயல்முறை ஆணை **பி.வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. M.P.2/2000 ன் எதிர்உரை விவரங்களை நான் சொல்லி தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 1968 ல் இருந்து இன்று வரை தாவாச் சொத்தில் எங்களுக்கு உரிமையோ, உடமையோ எக்காலத்திலும் இருந்தது இல்லை என்றாலும், தாவாச் சொத்துக்கான மூல ஆவணத்தை வேண்டுமென்றே மறைத்து அனைத்து நடவடிக்கைகளிலும் ஆரம்பத்தில் இருந்து செயல்பட்டு பிரதிவாதிகளையும், நீதிமன்றத்தையும் ஏமாற்ற நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்றால் சரியல்ல.

21. பெரும்பண்ணை வரதராஜ பெருமாள் கோவில் எங்கள் ஊரில் உள்ளது என்றால் சரிதான் அந்த கோவிலுக்கு நான் சென்றுள்ளேனா என்றால் சென்று உள்ளேன். அந்த கோவிலுக்கு சுப்பைய அய்யங்காரும், அவரது வாரிசுகளும் தான் பூஜை செய்வார்கள் என்றால் எனக்கு தெரியாது. பெருமாள் கோவிலில் பூஜை செய்பவர்கள் தான் சிவன் கோவிலிலும் பூஜை செய்வார்கள். தாவாச் சொத்து சுப்பையா அய்யங்கார் வாரிசுகள் விற்பனை செய்து அவர்களிடம் இருந்து 7 முதல் 9 பிரதிவாதிகள் கிரயம் பெற்று அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும், கிரய ஆவணத்தின்படி தாவாச் சொத்து 7 முதல் 9 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. எதிர்கட்டு கோரிக்கை அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 3ம் பிரதிவாதி சார்பாக தாக்கல் செய்த கூடுதல் எதிர்வழக்குரையை நான் படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. தாவாச் சொத்து 12.06.1863 ம் தேதி பிரிட்டிஷ் அரசால்

பெரும்பண்ணை வரதராஜ பெருமாள் கோவிலுக்கு இனாம் கமிசனர் வழங்கி உள்ளார் என்றால் சரியல்ல. 12.06.1863ம் தேதியிட்ட இனாம் கமிசனர் உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த போது நான் படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. கடந்த 1911ம் ஆண்டு அரசு நியமனம் செய்த ரீ சர்வே மூலம் சொத்துக்களை அளந்து பட்டா வழங்கி உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது.

2. மேற்கண்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தும் நான் அதை பார்க்கவில்லை என்றால் சரிதான். கடந்த 1911ம் ஆண்டு பதிவேட்டில் பெரும்பண்ணை வரதராஜ பெருமாள் கோவில் பூசாரி பெருமாள் அய்யங்கார் என கண்டுள்ளது என்றால் சரிதான். பெரும்பண்ணை வரதராஜ பெருமாள் கோவில் தற்கால பூசாரி கே.எஸ்.எஸ்.சுப்பையா அய்யங்கார் என சிட்டாவில் கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் 07.10.1968ல் செட்டில்மெண்ட் தாசில்தார் கோபி செட்டிபாளையம் க.ச.எண்.50/2 பு.ஏ.5.63ஐ பெரும்பண்ணை வரதராஜ பெருமாள் திருக்கோவில் rep by its Poojari for the time being K.S.S.Subbayyyangar என கண்டுள்ளது என்றால் சரிதான். கோவில் பூசாரிக்கு பூஜை செய்ய உரிமை உள்ளது வேறு உரிமையில்லை என்றால் சரியல்ல.

3. மேற்கண்ட அய்யங்கார் இறந்த பிறகு அவரது வாரிசுகள் வருவாய் துறையில் தங்கள் பெயரில் பட்டா பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பட்டாவின் படி அய்யங்காரின் வாரிசுகள் பல நபர்களுக்கு கிரயம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்து சம்பந்தமாக அய்யங்காரின் வாரிசுகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் அரசு ஆணையர் மற்றும் வருவாய் துறைக்கு மனு கொடுத்து ஆவணங்களை உருவாக்கி உள்ளார்கள் என்றால் சரிதான். மேற்கண்ட அய்யங்காரின் வாரிசுகள் அவர்கள் மூலமாக கிரயம் பெற்ற நபர்கள் மாண்புமிகு சார்பு நீதிமன்றம் திருப்பரில் சி.எம்.ஏ.3/2019 தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான்.

4. மேற்கண்ட சி.எம்.ஏ.3/2019 ல் முழுமையான விசாரணைக்கு பின்னிட்டு வழக்கில் கண்ட சொத்தானது பெரும்பண்ணை வரதராஜு பெருமாள் கோவிலுக்கு பாத்தியப் பட்டது என்றும், கோவிலை தவிர வேறு யாருக்கும் சொத்தின் மீது உரிமையும்

பாத்தியமும் கிடையாது என தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். கோவில் சொத்தை கோவிலின் பூசாரியாக இருந்து செயல்பட்டு வந்த கே.எஸ்.எஸ்.சுப்பையா அய்யங்காரின் வாரிசுகளிடம் தங்களது என்று உரிமை கொண்டாடி 3ம் நபர்களுக்கு விற்பனை செய்ததில் உரிமை உள்ளதா என்றால் இல்லை. தாவாச் சொத்து கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2026.04.08 15:03:15 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.